

மூளையில் உள்ள ரத்தக்குழாயில் அடைப்பு ஏற்பட்டு உடனே சென்னை மியாட் ஆஸ்பத்திரிக்கு சென்றதால் நவீன அறுவை சிகிச்சை செய்து குணம் அடைந்த கலாவதி, ஸ்ரீனிவாசராவ் ஆகியோருக்கு மியாட் ஆஸ்பத்திரியின் நிறுவனர் டாக்டர் பி.வி.ஏ.மோகன்தாஸ், கைகுலுக்கி வாழ்த்து தெரிவித்தபோது எடுத்தபடம். அருகில் ஆஸ்பத்திரியின் தலைவர் மல்லிகா மோகன்தாஸ், நவீன சிகிச்சை அளித்த டாக்டர்கள் கே.முரளி, கிருஷ்ணன் பாலகோபால் ஆகியோர் உள்ளனர்.

### பக்கவாதம் வந்த உடன் ஆஸ்பத்திரிக்கு வந்தால்

# மூளையில் ஏற்படும் ரத்தக்குழாய் அடைப்பை போக்க நவீன சிகிச்சை

## மியாட் ஆஸ்பத்திரி நிறுவனர் டாக்டர் பி.வி.ஏ.மோகன்தாஸ் பேட்டி

சென்னை, நவ.7–

பக்கவாதம் வந்த உடன் ஆஸ்பத்திரிக்கு வந்தால் மூளையில் ஏற்பட்டுள்ள ரத்தக்குழாய் அடைப்பை போக்க நவீன சிகிச்சை அளிக்கப்படுகிறது என்றும் அதனால் அந்தநோயாளி மீண்டும் வழக்கம் போல செயல்படுவார் என்றும் மியாட் ஆஸ்பத்திரியின் நிறுவனர் டாக்டர் பி.வி.ஏ.மோகன்தாஸ் தெரிவித்தார்.

சென்னை மியாட் ஆஸ்பத்திரியின் நிறுவனர் டாக்டர் பி.வி.ஏ.மோகன்தாஸ் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது:–

### பக்கவாதம்

பக்கவாதம் பல வித காரணங்களால் ஏற்படுகிறது. புகைபிடித்தல், உயர் கொலஸ்ட்ரால், உயர் ரத்த அழுத்தம், கட்டுப்பாட்டில் இல்லாத சர்க்கரை நோய், உடற்பயிற்சி இல்லாமை, மது அருந்துதல், உடல் பருமன், சத்தற்ற உணவு சாப்பிடுதல், இருதயத்தில் ஏதாவது நோய் ஆகிய ஏதாவது ஒரு காரணத்தால் மூளைக்கு செல்லும் குழாயில் அடைப்பு ஏற்படுகிறது.

அதனால் மூளைக்கு ரத்தம் செல்வதில்லை. இதன் காரணமாக முகம் கோணுதல், கை, கால்கள் செயல் இழத்தல், பேச்சு திறன் இல்லாமை ஆகியவை ஏற்படுகிறது. இதுவே பக்கவாதம் ஆகும். பக்கவாதம் குறைவாக தாக்கினால் பாதிப்பு குறைவாக இருக்கும்.

### நவீன சிகிச்சை

ஆனால் பொதுமக்கள் பலர் பக்கவாதம் குறித்த விழிப்புணர்வு இல்லாமல் இருக்கிறார்கள். மூளையில் ரத்தக்கசிவு இருந்தாலும் ஏற்படும். 85 சதவீதம் பேருக்கு மூளையில் ஏற்பட்ட ரத்தக்குழாய் அடைப்பு தான் காரணமாக இருக்கும். இப்படிபட்டவர்களுக்கு பக்கவாதம் ஏற்பட்டால் முன்பு உடனே விலை உயர்ந்த மருந்தை ஊசி மூலம் செலுத்துவோம். அதில் குணம் அடையாவிட்டால் மூளையில் அறுவை சிகிச்சை செய்வோம்.

என்னதான் அறுவை சிகிச்சை செய்தாலும் முன்பு போல செயல்பட முடியாது.

ஆனால் கடந்த 3 ஆண்டுகளாக உலகில் புதிய தொழில் நுட்பத்தில் நவீன அறுவை சிகிச்சை அளிக்கப்படுகிறது. அதுவும் சிறிய அறுவை சிகிச்சைதான்.

### பழைய நிலையை அடையலாம்

பக்கவாதம் வந்த 3 மணிநேரத்தில் மியாட் ஆஸ்பத்திரி போன்று இந்த வசதி உள்ள ஆஸ்பத்திரிக்கு செல்லவேண்டும். அல்லது 4½ மணி அல்லது 6 மணிநேரத்திலாவது வரவேண்டும். வந்தால் உடனே நரம்பியல் நிபுணர்கள் அவரை சோதிப்பார்கள். பின்னர் சி.டி. ஸ்கேன் எடுத்து பார்த்து உடனே அவருக்கு மூளையில் கட்டி என்று தெரிந்தால் எந்த இடத்தில் கட்டி உள்ளது என்று பார்க்கப்படும்.

பின்னர் உடனடியாக அவருக்கு காலில் உள்ள ரத்தக்குழாயை சிறிது வெட்டி அதன் மூலம் மேல்நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 'ஸ்டன்ட் ரெட்ரீவர்' என்ற ஸ்டன்டை பொருத்துவோம். இதுவே நவீன சிகிச்சை முறை. இந்த நவீன அறுவை சிகிச்சை மூலம் மியாட் ஆஸ்பத்திரியில் கடந்த ஒரு ஆண்டில் மட்டும் 12 பேர் குணம் அடைந்துள்ளனர். அவர்கள் அனைவரும் பழைய நிலையை அடைந்துள்ளனர்.

### கலாவதி

சமீபத்தில் மணப்பாக்கத்தை சேர்ந்த கலாவதி என்ற 42 வயது பெண்ணை மயக்கம் அடைந்த நிலையில் அவரது மகன் தென்னரசு மற்றும் உறவினர்கள் கொண்டு வந்து 30 நிமிடத்திற்குள் மியாட் ஆஸ்பத்திரியில் சேர்த்தனர்.

அவருக்கு மூளையில் அடைப்பு ஏற்பட்டு இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. எனவே அவருக்கு உடனே நவீன அறுவை சிகிச்சை செய்தோம். 5 நாட்கள் மட்டும் ஆஸ்பத்திரியில் இருந்து வீடு திரும்பினார். நவீன சிகிச்சை செய்த உடன் அவரது உடலில் முன்னேற்றம் தெரிந்தது. இப்போது அவர் முன்பு போல நன்றாக இருக்கிறார்.

### அதிகாரி ஸ்ரீனிவாசராவ்

அதேபோல கே.கே.நகரைச் சேர்ந்த மத்திய அரசு அதிகாரி ஸ்ரீனிவாசராவ் (43) பக்கவாதம் ஏற்பட்டு கை, கால் செயல் இழந்த நிலையில் உடனே ஆஸ்பத்திரிக்கு வந்தார். அவருக்கும் இதே நவீன சிகிச்சை அளிக்கப்பட்டது. தற்போது அவர் நன்றாக இருக்கிறார்.

எனவே பக்கவாதம் ஏற்பட்டால் மியாட் ஆஸ்பத்திரிக்கு வாருங்கள். காலம் கடந்து வந்தால் இந்த நவீன சிகிச்சையை அளிக்க முடியாது. மியாட் ஆஸ்பத்திரியில் 'ஸ்ட்ரோக் ரெஸ்டோர் சென்டர்' அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு டாக்டர் பி.வி.ஏ. மோகன்தாஸ் தெரிவித்தார். பேட்டியின்போது ஆஸ்பத்திரியின் தலைவர் மல்லிகா மோகன்தாஸ், ரத்தக்குழாய் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் கே.முரளி, நரம்பியல் நிபுணர் டாக்டர் கிருஷ்ணன் பாலகோபால் ஆகியோர் உடன் இருந்தனர்.